**இலங்கை மத்திய வங்கி**

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**

**2020 மே 05 வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2020இன் 02ஆம் இலக்கம்**

---

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான திரவச் சொத்துக்கள்**

கொவிட்-19 தொற்றின் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) திரவத்தன்மை நிலைமைகளின் மீது ஏற்படக்கூடிய மோசமான தாக்கத்தினைப் பரிசீலனையில் கொண்டு, திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 21(1), 86, 46(1) மற்றும் 76(ஜே)(1) என்பனவற்றினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளில், அதிவிசேட வழிமுறையொன்றாக, நாணயச் சபை, இவ்விதிவிலக்கான சூழ்நிலையில் 2021 யூன் 30 வரை பின்வரும் சொத்துக்கள் திரவச் சொத்துக்களாகக் கருதப்படுதல் வேண்டும் எனத் தீர்மானிக்கிறது.

1. வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்

1.1 வங்கித்தொழில் சட்டத்தின் 21(1)ஆம் பிரிவின் நியதிகளில், ஒவ்வொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியும் நாணயச் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான 20 சதவீதத்திற்குக் குறைவாகவும் 40 சதவீதத்திற்குக் கூடுதலாகவும் இருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, அத்தகைய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரத்தின் தன்மையினைப் பொறுத்து, நாணயச் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சொத்தினைச் திரவச் சொத்தாகப் பேணுதல் வேண்டும்.

1.2 திரவச் சொத்துக்களின் கீழ் 86ஆம் பிரிவின் விடயம் (ஜி)இன் நியதிகளில் நாணயச் சபைக்கு அத்தகைய ஏனைய சொத்துக்களை திரவச் சொத்துக்களாகத் தீமானிப்பதற்கான அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

1.3 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளில், வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற அனைத்து அல்லது ஏதேனுமொரு வங்கிக்கு எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி அத்தகைய வங்கிக்கு அல்லது வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. திரவச் சொத்துக்கள்

2.1 நியதி திரவச் சொத்து விகிதத்தினைக் கணிக்கும் நோக்கத்திற்காக, 2021 யூன் 30ஆம் நாள்வரை பின்வருவனவற்றையும் திரவச் சொத்துக்களாகக் கருதுதல் வேண்டும்.

(i) மூத்த பிரசைகள் சிறப்பு வைப்பு திட்டத்தின் மீது பெறத்தக்க வட்டி உதவுதொகை

(ii) இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டு, நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களின் கீழ் கட்டம் 1 இல் வகைப்படுத்தப்பட்ட உச்சமட்ட 10 சதவீதத்துடன் ஓராண்டினை விஞ்சாத முதிர்ச்சியுடன் கூடிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வெளிப்படுத்துகைகள்

(iii) மற்றைய உரிமம்பெற்ற வங்கிகளில் உரிமம்பெற்ற வங்கிகளினால் வைத்திருக்கப்படும் பின்வரும் தன்மையைக் கொண்ட நிலையான வைப்புக்கள்

(அ) 20 சதவீதம் கொண்ட உச்ச வீதத்துடன், முதிர்ச்சிக்காக எஞ்சியுள்ள காலம் 1 ஆண்டினை விஞ்சியதாக ஆனால் 2 ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது அதற்குச் சமனானவையாக இருக்கின்றவை.

(ஆ) 30 சதவீதம் கொண்ட உச்ச வீதத்துடன், முதிர்ச்சிக்காக எஞ்சியுள்ள காலம் 2 ஆண்டுகளை விஞ்சியதாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவானதாக அல்லது அதற்குச் சமனானவையாக இருக்கின்றவை.

(iv) வைப்புக்களினால் பிணையிடப்பட்ட கடன்களின் கீழுள்ள வைப்புக்களில் 20 சதவீதத்திற்குச் சமனானவை.

(v) கடன்களின் தீர்ப்பனவிற்காக ஊழியர் சேம நிதியத்திலிருந்து பெறத்தக்கவைகள்.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்